**திருத்துறைப்பூண்டி நகராட்சி**

**இயல்பு கூட்ட நடவடிக்கைகள்**

**திருத்துறைப்பூண்டி நகர்மன்றத்தில் 29.11.2021 திங்கட் கிழமை தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்ட இயல்பு கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை திரு.என்.சந்திரசேகரன்,பி.இ.,**
**தனி அலுவலர்,**
**திருத்துறைப்பூண்டி நகராட்சி.**

<table>
<tr><th rowspan="2">பொருள் எண்</th><th rowspan="2">பொருள்கள் விபரம்</th><th colspan="2">நகர்மன்றத் தீர்மானம்</th></tr>
<tr><th>தீர்மானம் எண்</th><th>விபரம்</th></tr>
<tr><td>01</td><td>நகராட்சி ஆணையர் அவர்களின் நவம்பர்-2021 மாதத்திற்கான நாட் குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு பதிவு செய்யலாம்.</td><td>380</td><td>பதிவு செய்யப்பட்டது</td></tr>
<tr><td>02</td><td>நகராட்சி நிர்வாக இயக்குனர் சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர் தஞ்சாவூர் அவர்களின் வரி வசூல் ஆய்வு கூட்டத்தில் வழங்கப்பட்ட அறிவுரைகளின்படி இந்நகராட்சி வரியினங்கள் வசூலை தீவிரப்படுத்தும் பொருட்டு பொதுமக்களுக்கு அறிவிப்பு வாசகத்தை ஆட்டோ ஒலிப்பெருக்கி மூலம் விளம்பரம் செய்ய நாள் ஒன்றுக்கான விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விளம்பர நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்ற விலைப்புள்ளிகள் விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>
<table>
<tr><th>வ.எண்.</th><th>விலைப்புள்ளி கொடுத்த நிறுவனம் விபரம்</th><th>ஒரு நாள் வாடகை ரூ.</th></tr>
<tr><td>1.</td><td>ஹரீஷ் பிரபு பப்ளிசிட்டி</td><td>2500/-</td></tr>
<tr><td>2.</td><td>அம்மன்விளம்பர நிறுவனம்</td><td>2400/-</td></tr>
<tr><td>3.</td><td>தேவா பப்ளிசிட்டி</td><td>2300/-</td></tr>
</table></td><td>381</td><td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | **அலுவலக குறிப்பு:**<br>**1.** அனுமதி வழங்கலாம்.<br>**2.** குறைவான விலைப்புள்ளி அளித்த தேவா பப்ளிசிட்டி நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கலாம்.<br>**(ந.க.எண் 245/2020/அ1)** | | |
| **03** | இந்நகராட்சியின் பொதுசுகாதாரம் பிரிவு தூய்மை பணியாளர்கள் மற்றும் தகுதியுடைய பணியாளர்களுக்கு சீருடை மற்றும் சீருடைக்கான தையற் கூலி ரூ.1,00,000/- (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) ஆகும் மன்ற பொருள் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:**<br>**1.** அனுமதிக்கலாம்.<br>**2.** பொதுசுகாதாரப் பணியாளர்கள் மற்றும் தகுதியுடைய பணியாளர்கள் நலன் கருதி மன்ற தீர்மானம் எண் 332 நாள் 30.06.2021-ல் ரூ.3.00இலட்சம் நிர்வாக அனுமதி பெறப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண் 1202/2020/எச்1)** | **382** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| **04** | இந்நகராட்சிப் பகுதியில் திடக்கழிவு மேலாண்மை பணி தனியார் பங்களிப்புடன் (outsourcing) தினசரி 45 நபர்களை பணிக்கு அனுப்புதல் பணிக்கு MSG Infra, Thanjavur நிறுவனம் மூலம் 30.09.2020ல் பணி உத்தரவு வழங்கப்பட்டது. டிசம்பர்-2021 மற்றும் பிப்ரவரி-2022 ஆகிய மூன்று மாதங்களுக்கு ஆகும் உத்தேச தொகை ரூ.22.00இலட்சமாகும். (ரூபாய் இருபத்திரண்டு இலட்சம் மட்டும்) சென்னை நகராட்சி நிர்வாக இயக்குனர் அவர்கள் தமிழ்நாடு முழுவதும் ஒரே மாதிரியான தொகை தூய்மை பணியாளர்களுக்கு வழங்குவதற்கு உத்தரவு வெளியிட இருப்பதால் தற்போது பணிப்பார்த்து வரும் MSG Infra, Thanjavur நிறுவனத்திற்கு ஒப்பந்தப்புள்ளியினை அதே விலை விகிதத்தில் தற்காலிகமாக | **383** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | நீட்டிப்பு செய்து வழங்கிட ஆகும் செலவினத்திற்கு மன்றப்பொருள் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:**<br>**1.** அனுமதிக்கலாம்.<br>**2.** நகராட்சியின் நலன் கருதியும், நிர்வாக நலன் கருதியும் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு ஆகும் தொகையினை மன்றம் அனுமதி வழங்கிடலாம்.<br>**(ந.க.எண் 1716/2020/எச்1)** | | |
| **05** | இந்நகராட்சிப் பகுதியில் டெங்கு தடுப்பு நடவடிக்கையில் டெங்கு காய்ச்சல் பரப்பும் கொசுக்கள் உற்பத்தியாகும் இடங்களை உடன் கண்டறிந்து அழித்தல் வீடு வீடாக சென்று டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள முற்றிலும் தற்காலிக முறையில் டெங்கு தடுப்பு மஸ்தூர் (Domestic Breeding Checker - DBC 17 நபர்கள்) The Karan Social Development Foundation நிறுவனம் மன்னார்குடி டிசம்பர்-2021, ஜனவரி-2022 மற்றும் பிப்ரவரி-2022 ஆகிய மூன்று மாதக் காலத்திற்கு அதே விலை விகிதத்தில் கால நீட்டிப்பு செய்வதற்கு உத்தேச செலவினம் ரூ.8.00இலட்சம் மட்டும் ஆகும். இதனை வருவாய் பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:**<br>**1.** நோய் தடுப்பு அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>**2.** நோய் தடுப்பு பணியின் அவசர அவசியம் கருதியும் தனி அலுவலர் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். இதற்காகும் உத்தேச செலவினம் ரூ.8.00 இலட்சம் வருவாய் நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண் 1818/2020/எச்1)** | **384** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

<table>
<tr>
<td>06</td>
<td>இந்நகராட்சியின் பொதுசுகாதாரப் பிரிவிற்கு வெளிக் கொணர்வு மூலம் தூய்மை பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குனர் சென்னை அவர்களின் 02.10.2021ந்தேதிய கடிதம் ந.க.எண்.21787/2021/ இஏ-2-ல் தெரிவித்துள்ளபடி வெளிக்கொணர்வு முகமை மூலம் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு பணியாளர்கள் பணியமர்த்துதல் தொடர்பாக அளவு கோல் நிர்ணயம் செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த அளவுகோலின்படி கீழ்க்கண்டவாறு பணியாளர்கள் தேவைப்படுகிறது.
<table>
<tr><th>வ.எ.</th><th>பணியாளர் பெயர்</th><th>பணியாளர்கள் எண்ணிக்கை</th></tr>
<tr><td>1.</td><td>தூய்மை பணியாளர்கள்</td><td>51</td></tr>
<tr><td>2.</td><td>தூய்மை பணி மேற்பார்வை யாளர்கள்</td><td>9</td></tr>
<tr><td>3.</td><td>ஓட்டுநர்</td><td>1</td></tr>
</table>
<br>
மேற்கண்டவாறு கணக்கீடு செய்யப்பட்டதற்கு உத்தேச செலவினம் ஆண்டு ஒன்றுக்கு ரூ.106.87இலட்சமாகும். நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி பெறுவதற்கு முன்மொழிவுகள் அனுப்புவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.
<br>
அலுவலக குறிப்பு:
<br>
1. அனுமதிக்கலாம்.
<br>
2. நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு வெளிக்கொணர்வு கருத்துரு அனுப்புவதை மன்றம் அனுமதிக்கலாம்.
<br>
<u>(ந.க.எண் 1716/2020/எச்1)</u></td>
<td>385</td>
<td>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| **07** | திருத்துறைப்பூண்டி நகராட்சிக்குட்பட்ட புல எண்கள். 157/5பி, 5சி, 157/டி1, 5இ, 5எப், 157/6 மற்றும் 159/எச்-ல் 2 எக்கர் 51 சென்ட் இடத்தில் குடியிருப்பு மனைப்பிரவு அமைக்க, நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்கள் மேற்கண்டுள்ள உத்தேச மனைப்பிரிவிற்கு செல்வதற்கான அணுகு பாதையினை திருத்துறைப்பூண்டி நகராட்சி ஆணையர் பெயருக்கு இனாம் சாசனம் செய்து வழங்கி அதன் விவரத்தினை தெரிவிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளதால் மனுதாரர் திரு.கே.ஏகாம்பரம், வடக்கு தெரு, நெடும்பலம், திருத்துறைப்பூண்டி தாலுக்கா என்பவர் மேற்கண்டுள்ள உத்தேச மனை பிரிவிற்கு செல்லும் 7 மீட்டர் அகலம் கொண்ட 35.60 மீட்டர் நீளம் உள்ள புல எண்கள் 159/1எச்-ல் 243.63 சதுர மீட்டரும், 159/1ஜி-ல் 17 சதுர மீட்டர் இடத்தை திருத்துறைப்பூண்டி நகராட்சி ஆணையர் பெயருக்கு இனாம் சாசனம் செய்து கொடுக்க அனுமதி கோரியுள்ளார். எனவே மேற்கண்டுள்ள உத்தேச மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களின் அனுமதி பெற ஏதுவாக மனுதாரரின் கோரிக்கையினை ஏற்று மேற்கண்டுள்ள உத்தேச மனை பிரிவிற்கு செல்லும் 7 மீட்டர் அகலம் கொண்ட 35.60 மீட்டர் நீளம் உள்ள புல எண்கள் 159/1எச்-ல் 243.63 சதுர மீட்டரும், 159/1ஜி-ல் 17 சதுர மீட்டர் பரப்பளவு உள்ள சாலைக்கான இடத்தை திருத்துறைப்பூண்டி ஆணையர் பெயருக்கு இனாம் சாசனம் செய்து கொடுக்க அனுமதி வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**<u>(ந.க.எண்617/2016/எப்1)</u>** | **386** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| **08** | திருத்துறைப்பூண்டி நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலைய கடை எண்.02-ன் குத்தகை காலம் 31.03.2021 ஆம் தேதியுடன் முடிவடைந்ததால் மேற்படி கடையின் குத்தகைதாரர் திரு.பொ.கருணாநிதி என்பவரால் செலுத்தி வரப்பெற்ற தினசரி நாள் வாடகை தொகையில் **15% உயர்வு** செய்து மேலும் மூன்றாண்டுகளுக்கு அதாவது **01.04.2021 முதல் 31.03.2024 வரை** குத்தகை உரிமத்தினை புதுப்பித்து வழங்கும்படி வரப்பெற்ற விண்ணப்பத்தினை நகர்மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது. | **387** | **அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது** |

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><th>வ. எண்</th><th>குத்தகை இனம்</th><th>குத்தகைதாரர் பெயர் (ம) முகவரி</th><th>01.04.2018 முதல் 31.03.2021 வரையுள்ள தினசரி நாள் வாடகை ரூ.</th><th>15 சதவீதம் உயர்வு செய்து நிர்ணயம் செய்யப்படும் தினசரி நாள் வாடகை ரூ.</th></tr>
<tr><td>1.</td><td>புதிய பேருந்து நிலைய கடை எண்.02</td><td>திரு.பொ.கருணாநிதி, த/பெ.பொன்னுசாமி, 3/36.சோழன் நகர், கடியாச்சேரி.</td><td>493/-</td><td>567/-</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு:</u><br>
அரசாணை (நிலை) எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 03.07.2007-ல் தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுரைகளை பின்பற்றி குத்தகைதாரர் ஏற்கனவே செலுத்தி வரப்பெற்ற தினசரி நாள் வாடகை தொகையில் 15% உயர்வு செய்து 01.04.2021 முதல் 31.03.2024 வரை மூன்றாண்டுகளுக்கு அங்கீகரித்து வாடகை தொகை நிர்ணயம் செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
<u>ந.க.எண்.6801/2013/அ2</u>
</td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>09</td>
<td>திருத்துறைப்பூண்டி நகராட்சியில் இயக்குதல் மற்றும் பராமரித்தல் இடைவெளி நிரப்புநிதி 2021-22இன்கீழ் வார்டு எண்.13 அபிஷேகக்கட்டளை தெருசமுதாய கழிப்பறை ரூ.6.00இலட்சம் மதிப்பீட்டிலும் மற்றும் வார்டு எண்.21 பெரியநாயகிபுரம் சமுதாயகழிப்பறை ரூ.4.00இலட்சம் மதிப்பீட்டிலும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி வேண்டி மன்ற அனுமதி கோரப்படுகிறது.</td>
<td>388</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td>அலுவலககுறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br><u>ந.க.எண்.1480/2021/இ1</u></td><td></td><td></td></tr>
<tr><td>10</td><td>திருத்துறைப்பூண்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1ல் ஜே.கே.ஆர் கார்டன் பகுதியில் கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டு திட்டம் (KNMT) 2021-2022ன்கீழ் பூங்கா அமைப்பதற்கு ரூ.40.00இலட்சம் மதிப்பீட்டில் பணியினை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு மாலை முரசு நாளிதழில் விளம்பரம் வெளியிடப்பட்டதற்கான கட்டணத் தொகை ரூ.6300/- எலிகண்ட் பப்ளிசிட்டிஸ், சென்னை <u>நிறுவத்திற்கு வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.</u>
<table>
<tr><td>வ. எண்</td><td>நிறுவனத்தின்பெயர்</td><td>விளம்பரம் வெளியிடப்பட்ட தேதி</td><td>கட்டணத் தொகை ரூ.</td></tr>
<tr><td>1.</td><td>எலிகண்ட் பப்ளிசிட்டிஸ், சென்னை</td><td>மாலை முரசு 11.11.2021</td><td>6300.00</td></tr>
<tr><td></td><td></td><td>கூடுதல்</td><td>6300.00</td></tr>
</table>
அலுவலககுறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br><u>கோ.எண்.1783/2021/இ1</u></td><td>389</td><td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>11</td><td>இந்நகராட்சியின் பொதுசுகாதாரம் மற்றும் பொறியியல் பிரிவிற்கு திருத்துறைப்பூண்டி நகராட்சியில் 15வது மத்திய நிதிக்குழு திட்டம் 2021-22 (Tied Grant)இன்கீழ் மானியமாக ரூ.46.0 0இலட்சமும் (Untied Grant)இன்கீழ் மானியமாக ரூ.32.00இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவற்றில் நிர்வாக அனுமதி பெறப்பட்ட கீழ்கண்ட Tied Grantல் 7 பணிகள் ரூ.40.60இலட்சம் மதிப்பீட்டிலும்</td><td>390</td><td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

UntiedGrantல் 3 பணிகள் ரூ.20.39இலட்சம் மதிப்பீட்டிலும் மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி வேண்டி மன்ற அனுமதி கோரப்படுகிறது.

| வ. எண் | பணியின்பெயர் | மதிப்பீடு ரூ.இலட்சத்தில் |
|---|---|---|
| | **<u>15வது மாநிலநிதிக்குழுTIED GRANT2021-2022</u>** | |
| | <u>திடக்கழிவு மேலாண்மை பணிகள்</u> | |
| 1 | நகராட்சி அலுவலக வளாகத்தில் பேட்டரியினால் இயங்கும் வாகனங்கள் மற்றும் இலகுரக வாகனங்கள் நிறுத்தும் இடம் கட்டும் பணி | 4.80 |
| 2 | 60kg ஹைட்ராலிக் பெயிலிங் பிரஷர் இயந்திரம் வாங்கும் பணி | 2.80 |
| 3 | வேதாரண்யம் சாலை உரக்கிடங்கு வளாகத்தில் வளமீட்பு மையம்(Resource Recovery Centre) அமைக்கும் பணி | 10.00 |
| | **<u>குடிநீர் பணிகள்</u>** | |
| 4 | வார்டு எண்.1மன்னை சாலையில் பம்ப்ரூம் அமைக்கும்பணி | 5.50 |
| 5 | வார்டு எண்.3 குட்ஷெட் தெருவில் பூஸ்டர் பம்ப் ரூம் அமைக்கும்பணி | 5.10 |
| 6 | நகராட்சி பகுதிகளிலுள்ள கைப்பம்புகள் மற்றும் பொதுக் குழாய்களுக்கு பிளாட்பார்ம் அமைக்கும் பணி | 3.40 |
| 7 | வார்டு எண்.16 கோட்டகம் தெருவில் 90எம்எம் குடிநீர் விநியோக குழாய்கள் மாற்றும் பணி | 9.00 |
| | **கூடுதல்** | **40.60** |

<table>
<tr><td></td><td>

| | | |
|---|---|---|
| | **15வது மாநிலநிதிக்குழுUNTIEDGRANT2021-2022** | |
| 8 | வார்டு எண்.23 சாமியப்பா நகர் மாரியம்மன் கோவில் தெரு தார் சாலை மேம்படுத்தும் பணி | 8.20 |
| 9 | வார்டு எண்.23 சாமியப்பா நகர் மேட்டுத் தெரு பாலம் முதல் அரசு மேல் நிலைப் பள்ளி வரையுள்ள தார்சாலை மேம்படுத்தும் பணி | 7.17 |
| 10 | வார்டு எண்.8 கழுவமுள்ளி தெருவில் சிறு பாலம் அமைக்கும் பணி | 5.02 |
| | **கூடுதல்** | **20.39** |

அலுவலககுறிப்பு; மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். 2172/2021/இ1**
</td><td></td><td></td></tr>
<tr><td>**12**</td><td>

திருத்துறைப்பூண்டி நகராட்சியில் இயக்குதல் மற்றும் பராமரித்தல் இடைவெளி நிரப்பு நிதி 2021-22இன்கீழ் வார்டு எண்.21 பெரியநாயகிபுரம் சமுதாய கழிப்பறை ரூ.4.00இலட்சம் மதிப்பீட்டில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கு 30.11.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **மதிப்பீடு ரூ.** | **ஒப்பந்தப்புள்ளிமதிப்பீடு ரூ.** | **சதவீதம் குறைவு/ அதிகம்** |
|---|---|---|---|---|
| 1 | திருமதி.எஸ்.விஜய குமாரி | ரூ.351498.77 | ரூ.351438.87 | 0.02சதவீதம் குறைவு |
| 2 | திரு.எஸ்.ஞான சுந்தரம் | | ரூ.352247.37 | 0.21சதவீதம் அதிகம் |

</td><td>**391**</td><td>**அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**</td></tr>
</table>

<table>
<tr><td></td><td>அலுவலக குறிப்பு:<br>வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.02 சதவீதம் குறைவான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திருமதி.எஸ்.விஜயகுமாரி என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br><u>(ந.க.எண் 1480/2021/இ1)</u></td><td></td><td></td></tr>
<tr><td>13</td><td>திருத்துறைப்பூண்டி நகராட்சியில் இயக்குதல் மற்றும் பராமரித்தல் இடைவெளி நிரப்பு நிதி 2021-22இன்கீழ் வார்டு எண்.13 அபிஷேகக்கட்டளை தெரு சமுதாய கழிப்பறை ரூ.6.00இலட்சம் மதிப்பீட்டில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கு 30.11.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>மதிப்பீடு ரூ.</th><th>ஒப்பந்தப் புள்ளி மதிப்பீடு ரூ.</th><th>சதவீதம் குறைவு/ அதிகம்</th></tr>
<tr><td>1</td><td>திருமதி.எஸ்.விஜய குமாரி</td><td rowspan="2">ரூ.525248.62</td><td>ரூ.525148.54</td><td>0.02சதவீதம் குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.எஸ்.ஞான சுந்தரம்</td><td>ரூ.528788.39</td><td>0.67சதவீதம் அதிகம்</td></tr>
</table>
அலுவலக குறிப்பு:<br>வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.02 சதவீதம் குறைவான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திருமதி.எஸ்.விஜயகுமாரி என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br><u>(ந.க.எண்.1480/2021/இ1)</u></td><td>392</td><td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>14</td><td>நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் விரைவில் நடைபெற உள்ளதால் புதிதாக</td><td>393</td><td>அலுவலக குறிப்பு</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | பொறுப்பேற்க உள்ள நகர்மன்ற தலைவர் மற்றும் நகர்மன்ற துணை தலைவர்களின் அறைகள் மற்றும் நகர்மன்ற கூட்ட அறை ஆகியவற்றை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.700/2021/அ3 நாள்.18.11.2021ல் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி பணிகளை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.5.00இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:**<br>மேற்படி செலவினத்தை பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**(ந.க.எண்:2378/2021/இ1)** | | **அங்கீகரிக்கப்பட்டது** |

ஒம்/ என். சந்திரசேகரன்,
ஆணையர்(கூ.பொ.) (ம)
தனி அலுவலர்,
திருத்துறைப்பூண்டி நகராட்சி.

/உண்மை நகல்/